# **கோயம்புத்தூர் மாநகராட்சி**

**அனுப்புநர்**

**திரு ஆர். வெங்கடாசலம்,**
**மேயர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி,**
**கோயம்புத்தூர்- 641 001**

**பெறுநர்**

**மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,**
**ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,**
**வார்டு குழுத் தலைவர்கள்,**
**நியமனக்குழு உறுப்பினர்,**
**நிலைக்குழு தலைவர்கள் மற்றும்**
**அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி.**

**அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி.**

**சட்டமன்ற உறுப்பினர்கள்**
**(கோவை கிழக்கு, கோவை மேற்கு,**
**சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்**
**மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),**

**பாராளுமன்ற உறுப்பினர்கள்**
**(கோவை மற்றும் பொள்ளாச்சி**
**பாராளுமன்றத் தொகுதிகள்)**

**ந.க.எண் : 6221 / 2010 / எம்சி. 8 நாள் : 19 .8.2010**

**அய்யா /அம்மா,**

**பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.**
**-----------**

**கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 26.08.2010 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**இணைப்பு : 1**

**/ உண்மைநகல் / உத்திரவின்படி/**

**மாமன்ற செயலாளர்**

**நகல் :**

**துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**
**ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**

# மாமன்ற சாதாரணக் கூட்டம்
# ஆகஸ்ட் 2010
# நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br><br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| 1 | தெற்கு மண்டலம் - உக்கடம் பேருந்து நிலையம் - திரு.முகமது சலீம் என்பவருக்கு ஆவின் பாலக பெட்டி அமைக்க இடம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 2 | நகரமைப்புப் பிரிவு - வ.உ.சி. மிருகக் காட்சி சாலை – எட்டிமடை கிராமத்திற்கு மாற்றுதல் - நிலம் கையகப்படுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 3 | நகரமைப்புப் பிரிவு - கவுண்டம்பாளையம் நகராட்சி – மாநகராட்சிக்கு சொந்தமான 36 ஏக்கர் நிலம் - புதிய சாலை அமைத்தல் - இடம் கையகப்படுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 4 | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம், வார்டு எண். 3 - மசக்காளிபாளைம் சாலை – விளாங்குறிச்சி கிராமம் எஸ்.எப்.எண். 491/3பா, விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 9 – 80 அடி அகல “ஏ1ஏ1” திட்டச் சாலையை 60’அடி அகலமாக குறைப்பது – மாமன்ற ஒப்பதல் கோருதல் - தொடர்பாக |
| 5 | நகரமைப்புப் புரிவு - கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடம் - 5.0 ஏக்கர் நிலத்தில் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி கட்டிடம் கட்டுதல் - ச.எண்.57/1 –கல்வி நில உபயோகமாக மாற்றம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 6 | தெற்கு மண்டலம் - உக்கடம் பைபாஸ் சாலையில் உள்ள மீன் மார்க்கெட் உட்புறம் சில்லரை வியாபாரிகளுக்கு கடைகள் ஒதுக்கீடு செய்து வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | தெற்கு மண்டலம் - கட்டண கழிப்பிடங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியது – உரிமம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | வடக்கு மண்டலம் - 70வது வார்டு - கணபதி ராயப்பா நகர் வாட்டர் டேங்க் கட்டிடத்தில் உள்ள அறையினை காவல்துறையினருக்கு வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 9 | மேற்கு மண்டலம் - காலியாக உள்ள வணிக வளாகக் கடைகள் - மறுபொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 10 | பொது சுகாதாரம் - சத்தி ரோடு மாடு அறுவைமனையில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மத்திய அரசு தோல் ஏற்றுமதி நிறுவனம் உடன் இணைந்து பணி மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 11 | பொது சுகாதாரம் - லாலி ரோடு மதுப்பழக்கத்தை ஒழிக்கும் சிகிச்சை மையத்தை கிருஷ்ணா மருத்துவமனை ஏற்று நடத்தவும், மற்றும் பிற வசதிளை மாநகராட்சியால் வழங்கவும் அனுமதித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 12 | நகரமைப்புப் பிரிவு - கோவை மாநகராட்சியுடன் பிற உள்ளாட்சிகளை இணைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 13 | கல்விப் பரிவு - மாநகராட்சி பள்ளிகளில் ஆசிரியர்களை பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் நியமனம் செய்தல் - மதிப்பூதியத் தொகை வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் – தொடர்பாக |
| 14 | பொது சுகாதாரப் பிரிவு - பொன்விழா ஆண்டு நகர்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிக்கன மற்றும் நாணய சங்கங்களுக்கு சமுதாயக் கூடம் கட்டுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 15 | பொறியியல் பிரிவு - வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையர் - ஜெர்மனி எஸ்லிங்கன் ஆம் நெக்கர், நகருக்கு செல்லுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

நன்றியுரை

அ) **திருக்குறள்**

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

(குறள் 6)

**விளக்கம்**

மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்திய தூயவனின் உண்மையான ஒழுக்கமுடைய நெறியைப் பின்பற்றி நிற்பவர்களின் புகழ்வாழ்வு நிலையானதாக அமையும்.

திருவள்ளுவர்.

---

ஆ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

கடந்த 30.07.2010 அன்று நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மீண்டும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலம் உக்கடம் பேருந்து நிலையத்தில் பெட்டிகடை அமைத்து வியாபாரம் செய்து கொள்ள அனுமதி வழங்குமாறு கே.முகமது சலீம் (உடல் ஊனமுற்றோா்) என்பவா் தொடா்ந்து மாநகராட்சியில் விண்ணப்பம் அளித்து வந்துள்ளாா். உக்கடம் பேருந்து நிலையத்தில் பெட்டி கடைகள் வைப்பதனால் பொது மக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக இருக்கும் என்பதால் மேற்படியாருக்கு பெட்டி கடை வைக்க அனுமதி மறுக்கப்பட்டது.

இந்நிலையில் மனுதாரா் வணக்கத்திற்குரிய மேயா் மற்றும் ஆணையாளா் அவா்களது மக்கள் குறை தீா்க்கும் முகாமில் பல முறை விண்ணப்பம் அளித்துள்ளதை தொடாந்து, மனுதாரருக்கு உதவும் பொருட்டு ஆவின் பாலகம் மூலம் பெட்டி அமைத்து ஆவின் நிறுவன பொருட்களை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்குமாறு ஆவின் நிா்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் ஆவின் நிா்வாக பொது மேலாளா் தனது 25.03.2010ம் தேதிய கடிதத்தில், மனுதாரா் உடல் ஊனமுற்ற நபராக இருப்பதை கருத்தில் கொண்டு இவருக்கு ஆவின் பாலக பெட்டி அமைத்து ஆவின் நிறுவன பொருட்களை விற்பனை செய்து கொள்வதற்கு அனுமதி வழங்குவதில் தங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்துள்ளாா்.

எனவே, திரு.கே.முகமது சலீம் என்பவருக்கு உக்கடம் பேருந்து நிலையத்தினுள் ஆவின் பாலக பெட்டி அமைத்து ஆவின் பொருட்களை மட்டும் விற்பனை செய்து கொள்வதற்கு மாத வாடகை ரூ.3584/- அடிப்படையில் இடம் ஒதுக்கீடு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.1548/ 2010/அ1

மாநகர மன்ற தீா்மானம் எண்.83 நாள்.26.08.2010

மாநகராட்சிப் பகுதியில் பல்வேறு இடங்களில் ஆவின் பாலகம் போன்ற பெட்டிக்கடைகள் வைக்க அனுமதி கோரி மாற்றுத் திறனாளிகள், மகளிா் சுயஉதவிக் குழுக்களிடமிருந்து பல்வேறு விண்ணப்பங்கள் தொடா்ந்து வரப் பெறுவதனால் அனைத்து விண்ணப்பங்களையும் ஒருசேர பரிசீலிக்கலாம் எனவும் பொருளை ரத்து செய்யவும் தீா்மானிக்கப்பட்டது.

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள திரு.கே.முகம்மது சலீம் என்பவருக்கு உக்கடம் பேருந்து நிலையத்தினுள் ஆவின் பாலக பெட்டி வைக்க அனுமதிக்கவேண்டும் என தெரிவித்து சி.பி.எம்.கட்சியின் ஆட்சேபனையைப் பதிவு செய்யுமாறு சி.பி.எம்.கட்சிக்குழு தலைவா் திரு.சி.பத்மநாபன் கேட்டுக்கொண்டாா். ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூா் மாநகராட்சிக்கு சொந்தமான மிருககாட்சி சாலை தற்சமயம் வ.உ.சி.பூங்காவில் இயங்கி வருகிறது. வ.உ.சி. பூங்கா மாநகரின் மையப் பகுதியில், ஜன நெருக்கமான பகுதியில் உள்ளதாலும், வன விலங்குகள் வாழ்வதற்கேற்ற சூழ்நிலையில் இல்லாததாலும், மத்திய வனவிலங்கு வாரியத்தின் ஆலோசனையின்படியும், தற்சமயம் அமைந்துள்ள மிருகக்காட்சி சாலையை மாநகருக்கு வெளியே, வன விலங்குகள் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையில் உள்ள எட்டிமடை கிராம வனப்பகுதியில் மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எட்டிமடை கிராமம் புல எண் 406/3ஏ1.ஏ1-இல் 68.30 ஏக்கா், 399/3 -இல் 1.40 ஏக்கா் கல்லாங்குத்து புறம்போக்கு நிலங்களும், சமதள தனியாா் பூமியான 399/2-இல் 14.28 ஏக்கா் ஆக மொத்தம் 83.98 ஏக்கா் நிலத்தை கையகப்படுத்தி அதில் கோயம்புத்தூா் மாநகராட்சியின் மிருககாட்சி சாலையை அமைக்கலாம்.

அரசு கல்லாங்குத்து புறம்போக்கு நிலத்தை மாநகராட்சிக்கு விதிமுறைகளின்படி உரிமை மாற்றம் செய்து தர மாவட்ட ஆட்சியா் மற்றும் அரசைக் கேட்டுக் கொள்ளவும், தனியாா் நில உரிமையாளா் சம்மதத்தின் பேரில் நேரடி பேச்சு வாா்த்தை மூலம் தனியாா் நிலங்களை கையகப்படுத்தவும், தனியாா் பேச்சு வாா்த்தைக்கு இயலாத சூழ்நிலையில் நில ஆா்ஜிதம் மூலம் தேவைப்படும் நிலங்களை கையகப்படுத்தவும், இதற்காகும் செலவினங்களுக்கு மாநகராட்சி பொது நிதி மற்றும் அரசு மானியம் மூலம் செலவு செய்திடவும் அனுமதி கோரும் இப்பொருள் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக் குழுவின் ஒப்புதலுக்கு சமா்ப்பிக்கப்பட்டதில் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீா்மானம் எண். 85, நாள். 6.8.2010 ன் மூலம் “மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது. இத்துடன் இதன் அணுகு சாலையினை உத்தேச நிலத்திற்கு நேராக கொண்டு செல்வதற்கு தேவையான நிலத்தையும் கையகப்படுத்துவதற்கும் பரிந்துரை செய்ய

தீர்மானிக்கப்பட்டது. மற்றும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய இதர பூங்காக்களையும் அமைக்கலாம் எனவும் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது'' என தீர்மானம் நிறைவேற்றி உள்ளதின் அடிப்படையில் இப்பொருள் மாமன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கலாம். ந.க.எண். 27581/2004(எம்.சி.4),எம்.எச்.5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.84 நாள்.26.08.2010</u>

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் தீர்மானம் எண்.85 நாள் 06.08.2010ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

கோயம்புத்தூர் வடக்கு வட்டம், கவுண்டம்பாளையம் நகராட்சி புலஎண் 52/1,4-8, 53/1,56/1, 57/1, 58/1-3, 59/1-3, 60/2,68/1-3 மற்றும் 69-இல் மாநகராட்சிக்குச் சொந்தமான 36 ஏக்கர் நிலம் உள்ளது. அந்நிலத்தை பூங்கா, திடக்கழிவு மேலாண்மை, பள்ளி, மின்நிலையம், வார்டு அலுவலகம், இஸ்லாமிய மயானம், மற்றும் இந்துக்கள் மயானம் ஆகிய உபயோகங்களுக்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்திற்கும் மேட்டுப்பாளையம் சாலையிலிருந்து 6.60மீ அகலமுள்ள ஒரே ஒரு பாதை மட்டுமே உள்ளது, இப்பாதை வழியே இந்நிலத்தை பல்வேறு நில உபயோகங்களுக்கு முக்கியமாக மயான பாதை வழியே பள்ளி, பூங்கா போன்ற பகுதிகளுக்கு பயன்படுத்த இயலாது.

எனவே அந்நிலத்திற்கு புல எண்கள் 54/1ஏ1ஏ1 பகுதியில் 28.375 சென்ட் நிலமும் 55/2, பகுதியில் 14.327 சென்ட் ஆகமொத்தம் 42.70 சென்ட் நிலத்தை நில ஆர்ஜிதம் அல்லது தனியார் பேச்சு வார்த்தை மூலம் பெற்றால் 12.2மீ அகலத்தில் தனியாக ஒரு சாலை அமைக்க இயலும். நில உரிமையாளர் ஏற்றுக் கொண்டால் தனியார் நிலத்திற்குப் பதில் மாநகராட்சி இடத்தை வழங்கி நிலபரிவர்த்தனை மூலம் தேவைப்படும் இடத்தை கையகப்படுத்தி தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை கேட்டுக் கொள்ளவும், அவ்வாறு கையகப்படுத்தப்படும் நிலம் வழியே மேலே குறிப்பிட்ட மாநகராட்சி இடத்திற்கு தனியாக ஒரு சாலையமைக்க அனுமதிக்க கோரும் இப்பொருள் நகரமைப்பு குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டதில் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீர்மானம் எண். 86 நாள். 6.8.2010 ன் மூலம் "மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது" என தீர்மானம் நிறைவேற்றி உள்ளதன் அடிப்படையில் இப்பொருள் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அங்கீகரிக்கலாம் ந.க.எண். 5533/2010/எச்1(மேற்கு)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.85 நாள்.26.08.2010</u>

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் தீர்மானம் எண்.86 நாள் 06.08.2010ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்.3 மசக்காளிபாளைம் சாலை – விளாங்குறிச்சி கிராமம் எஸ்.எப்.எண்.491/3பா, விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 9 – 80 அடி அகல "ஏ1ஏ1" திட்டச் சாலை 60'அடி அகலமாக குறைப்பது – தொடர்பாக

பார்வை : மனுதாரர்கள் - உ லகத் தமிழ் செம்மொழி மாநாடு – மசக்காளிபாளையம் சாலை விரிவாக்கத்திற்கு நிலம் வழங்கியவர்கள் விண்ணப்பம் நாள் . 29.06.2010.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்.3 ஆர்கஸ் நகர் பகுதியில் அவினாசி சாலை பகுதியிலிருந்து தெற்கு நோக்கி மசக்காளிபாளையம் செல்லும் சாலையின் நுழைவாயில் பகுதி குறுகியதாக இருந்ததால் அடிக்கடி விபத்துக்களும், போக்குவரத்து நெருக்கடிகளும் பொதுமக்களை பெருமளவில் பாதித்து வந்தது.

தமிழக அரசின் சார்பில் நடந்து முடிந்த உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டின் அபிவிருத்தி பணிகளில் ஒன்றாக மேற்காண் 80அடி அகல உத்தேச திட்டசாலையை 30அடி அகலத்திலிருந்து 60அடியாக அகலப்படுத்தப்பட்டது. அரசு நிர்ணயித்த உரிய இழப்பீடு தொகை நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

மாநகராட்சிக்கு சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் மூலம் ஒப்படைப்பு செய்தனர். மேற்காண் நில உரிமையாளர்கள் மீதம் உள்ள தங்களின் நிலத்தினை உபயோகம் செய்துகொள்ளவும், உரிய கட்டிட அனுமதி பெறுவதற்கும் உதவியாக 80 அடி திட்டச் சாலையினை 60அடி அகலமாக குறைத்து உத்தரவு வழங்கும்படி கோரியுள்ளனர்.

மனுதாரர்கள் விண்ணப்பத்தில் கண்டுள்ள 80 அடி திட்டச் சாலையினை 60 அடி அகலமாக குறைப்பது தொடர்பாக நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில், நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீர்மானம் எண் 83. நாள். 06.08.2010-ன் மூலம் "'ஏ1ஏ1' – 80 அடி அகல திட்ட சாலையின் அகலத்தை அவிநாசி சாலையிலிருந்து தெற்காக 202 மீட்டர் நீளத்திற்கு மட்டும் 80 அடி அகலத்திலிருந்து 60' அடி அகலமாக குறைக்க கோரும் மனுதாரர்களின் கோரிக்கை மாமன்றத்தின் முடிவிற்கு பரிந்துரைக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டது" என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இப்பொருள் மாமன்றத்திற்கு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண் : 12756/ 2008/(எச்2வ)எம்.எச்.5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.86 நாள் 26.08.2010</u>

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் தீர்மானம் எண்.83 நாள் 06.08.2010ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் கவுண்டம்பாளையம் நகராட்சி ச.எண். 61/1 மற்றும் 57/1 பகுதியில் உள்ள கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான குப்பைக்கிடங்கு உள்ள 5.0 ஏக்கர் நிலத்தில் மாநகராட்சியின் மேல்நிலைப்பள்ளி கட்டிடம் கட்ட, மாநகராட்சியின் கல்வி, பூங்கா மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தனது தீர்மான எண். 14. நாள். 13.08.2008-ல் பரிந்துரை செய்ததன் அடிப்படையில் கோயம்புத்தூர் மாமன்றம் தனது தீர்மான எண்.213 நாள். 29.08.2008-ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான மேற்படி நிலம், கவுண்டம்பாளையம் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.7-ன் படி, ச.எண். 61/1 குடியிருப்பு பகுதியிலும் ச.எண்.57/1 விவசாய நில உபயோகத்திலும் உள்ளது. மேற்படி இடத்தில் பள்ளிக்கூட கட்டிடம் கட்டுவதற்கு ஏற்ற வகையில் ச.எண். 57/1-ல் உள்ள நிலம் விவசாய நில உபயோகமாகவும், ச.எண்.61/1 குடியிருப்பு நில உபயோகமாக இருப்பதை கல்வி நில உபயோகமாக மாற்றம் செய்வது பற்றிய இப்பொருள் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைகுழுவிற்கு வைக்கப்பட்டதில் நகரமைப்பு குழு தனது தீர்மான எண். 88. நாள் 06.08.2010-ல் " பெரும்பாலான உறுப்பினர்கள் பழைய குப்பை கிடங்கில் பள்ளிக் கூடம் கட்டுவதை ஆட்சேபம் தெரிவித்தனர். மாநகராட்சி கல்வி அலுவலரின் குறிப்போடு மாமன்றத்திற்கு பொருள் வைக்கத் தீர்மானிக்கப்பட்டது" என தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

இதன்படி மாநகராட்சி கல்வி அலுவலர் அவர்களின் குறிப்பிற்கு கோப்பு அனுப்பப்பட்டதில் வார்டு 62 பகுதியில் செயல்பட்டு வரும் கே.கே.புதூர் உயர்நிலை பள்ளிக்கு போதிய இடவசதிகள் இல்லை எனவும் இதன் காரணமாக எதிர்புரம் உள்ள மாநகராட்சி ஆரம்பள்ளியின் நான்கு அறைகளில் உயர்நிலை பள்ளி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன எனவும், மாணவ, மாணவியர்க்கென வழங்கப்பட்ட கணினிகள் மற்றும் கே-யான் மல்டி மீடியா கருவிகள் வைக்க போதுமான இடவசதி இல்லை எனவும், மாணவர்களுக்கு விளையாட்டு பயிற்சி வழங்க குறைந்தபட்சம் விளையாட்டு இடம் கூட இல்லை எனவும், சத்துணவு அருந்தும் அறைகள் அமைக்கப்பட வில்லை எனவும், வகுப்பறைகளில் காற்றோட்டமும் பகல் வெளிச்சமும் இல்லை எனவும், தேவையான அளவு கழிவறைகள் இல்லை எனவும், இடவசதியின்மை காரணமாக பள்ளியில் சேர விரும்பும் மாணவ, மாணவியரையும் சேர்க்க இயலாத சூழ்நிலை உள்ளது எனவும், மாணவர்களின் நலன் கருதி பள்ளியை தேவையான அளவு இடவசதியுள்ள இடத்திற்கு மாற்றம் செய்து வழங்க கோரியுள்ளார்.

எனவே மேற்காண் கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கு பகுதியில் உள்ள 5.0 ஏக்கர் நிலத்தில் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி கட்டிடம் கட்ட ச.எண்.57/1 –ல் உள்ள நிலப்பரப்பு விவசாய நில உபயோகமாகவும், ச.எண். 61/1 குடியிருப்பு நில உபயோகமாகவும் இருப்பதை கல்வி நில உபயோகமாக மாற்றம் செய்வது குறித்த இப்பொருள் மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அங்கீகரிக்கலாம். ந.க.எண். 9247/2009/எம்.டி.4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.87 நாள் 26.08.2010</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள ச.எண்.57/1 மற்றும் ச.எண்.61/1-ல் உள்ள 5.0 ஏக்கர் நிலத்தை கல்வி நில உபயோகமாக மாற்றம் செய்யலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.38.
நாள் 17.08.2010.

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பைபாஸ் ரோட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள மீன் மார்க்கெட்டில் உள்ள 68 கடைகள் மற்றும் மார்க்கெட்டினை இயக்குதல், பராமரித்தல் குத்தகை உரிமத்தினை ஒரே இனமாக உரிமம் ஒப்படை செய்ய மாமன்ற தீர்மான எண்.44 நாள்.21.05.2010-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி பழைய மீன்மார்க்கெட்டில் குளங்களில் மீன் பிடித்து வியாபாரம் செய்யும் தரைக்கடைதாரர்கள் தங்களுக்கு புதிய மீன் மார்க்கெட்டில் கடைகளை ஒதுக்கீடு செய்ய கோரி வருகின்றனர். மீன் மார்க்கெட்டில் உள்ள அனைத்து கடைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டபின்பு, சில்லறை வியாபாரிகள் வியாபாரம் செய்ய மீன் மார்க்கெட் வளாகத்தின் உட்புறம் 4' x 4' காலி இடம் ஒதுக்கீடு செய்து, உக்கடம் மொத்த மீன் மார்க்கெட்டில் உள்ளது போல் தினசரி வாடகையான ரூ. 20 /- நிர்ணயம் செய்தால் சில்லறை வியாபாரிகள் மிகுந்த பலன் பெறுவர். இதனால் பெறப்படும் வருவாய் மீன்மார்க்கெட் ஏலம் எடுக்கும் ஒப்பந்ததாரருக்குச் சேரும். எனவே, இவர்களுக்கு மேற்படி புதிய மீன் மார்க்கெட்டில் 4' x 4' அளவில் தரைகடைகள் வைத்துக்கொள்ள இடம் ஒதுக்கீடு செய்யவும் இதற்கு தினசரி கட்டணமாக ரூ. 20 /- வாடகையாக நிர்ணயம் செய்யலாம்.

மேற்குறிப்பிட்டுள்ளவாறு தரைகடைதாரர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்து அதற்கு கட்டணம் நிர்ணயம் செய்வதற்கு பார்வையில் கண்ட வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்காண் பொருள் குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> அனுமதிக்கலாம் ந.க.எண். 4006 / 2010 /அ1/ தெ

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.88 நாள் 26.08.2010</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.38 நாள் 17.8.2010ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

பார்வை வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.37 நாள் 17.08.2010.

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பொது ஏல குத்தகை இனங்களில் 5 கட்டண கழிப்பிடங்கள் மற்றும் உக்கடம் நவீன ஆடு அறுவைமனை ஆகிய 06 இனங்களுக்கு 12.8.2010 தேதியில் நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்குறிப்பிட்டுள்ள மூன்று இனங்களுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | சென்ற ஆண்டுத் தொகை ரூ. | அரசு மதிப்பு ரூ. | சராசரி ரூபாய் ரூ. | தற்போதைய உயர்ந்த பட்ச தொகை ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | உக்கடம் பேருந்து நிலைய நவீன கட்டண கழிப்பிடம் | 7,71,273.00 | 8,50,000.00 | 7,37,424.00 | 9,00,000.00 | பி.அப்துல்கபூர் |
| 2 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் உட்புறம் உள்ள நவீன கட்டணம் கழிப்பிடம் | 8,25,000.00 | 9,00,000.00 | | 10,31,000.00 | சி.ஆர்.வினாயகம் |
| 3 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் ஆர்.வி.ஹோட்டல் நவீன கட்டண கழிப்பிடம் | 6,96,000.00 | 7,80,000.00 | 7,10,336.00 | 7,53,100.00 | கே.முனியாண்டி |

மேற்குறிப்பிட்டுள்ள மூன்று இனங்களுக்கு பெறப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஏல ஒப்பந்தப்புள்ளி தொகையானது வரிசை எண்கள் 1 மற்றும் 2 இனங்களுக்கு முந்தைய ஆண்டு தொகை மற்றும் அரசு மதிப்பினைக் காட்டிலும் கூடுதலாகவும், வரிசை எண் 3 முந்தைய ஆண்டு தொகையினை காட்டிலும் கூடுதலாகவும் உள்ளது. எனவே மேற்படி உயர்ந்தபட்ச ஏல தொகைகளை ஏற்றுக் கொண்டு உரிமம் ஒப்படை செய்வதற்கு பார்வையில் கண்ட வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்காண் பொருள் குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.9659/2010/ அ1(தெ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.89 நாள் 26.08.2010</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.37 நாள் 17.08.2010ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல எல்லைக்குட்பட்ட 70வது வார்டு கணபதி ராயப்பா நகர் வாட்டர் டேங்க் கட்டிடத்தில் காலியாக உள்ள இரண்டாம் தளத்தில் 39.10 X 19'3 அளவுள்ள 754.63 சதுரடி அறையினை அலுவலக உபயோகத்திற்காக ஒதுக்கீடு செய்து தரும்படி காவல் ஆய்வாளர், திருட்டு வீடியோ தடுப்புப்பிரிவு கோவை அவர்கள் 20.10.2009ல் கேட்டுள்ளார்.

பொதுப்பணித்துறை வழிகாட்டுதலின்படி இரண்டாம் தளத்தில் உள்ள 39.10 X 19'3 அளவுள்ள 754.63 சதுரடி அறைக்கு, சதுரடி ஒன்றுக்கு ரூ.10.33/- என இளம் பொறியாளர் வாடகை கணக்கிட்டு கொடுத்ததின்பேரில் 754.63 சதுரடி கட்டிடத்திற்கு வாடகை ரூ.7,796/- ஆகிறது. இதனை காவல் ஆய்வாளர், திருட்டு வீடியோ தடுப்புப்பிரிவு, கோவை அவர்கட்கு தெரிவித்ததின் பேரில் 04.06.2010-ம் தேதிய கடிதத்தில் மேற்குறிப்பிட்டுள்ள அறைக்கு மேற்கண்ட வாடகை செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்படி கட்டிடத்தை அலுவலக பயன்பாட்டுக்கு ரூ.7,796/- மாத வாடகைக்கு காவல் ஆய்வாளர் திருட்டு வீடியோ தடுப்புப்பிரிவுக்கு ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 17.08.2010-ம் தேதிய தீர்மான எண் 30-ல் ஒப்புதல் அளித்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.12059/2009/அ7

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.90 நாள் 26.08.2010</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.30 நாள் 17.08.2010ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் : 9

பொருள்:- வணிக வளாக கடைகள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - காலியாக உள்ள மாநகராட்சி கடைகளுக்கு மறு பொது மின் ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. உச்சக்கேள்விதாரர்களுக்கு கடைகள் ஒப்படைத்தல் மற்றும் - ஏலம் கோரப்படாத இனங்களை மறு பொது மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருதல் -தொடர்பாக.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்தில் காலியாக உள்ள வணிக வளாக கடைகளுக்கான மறு பொது மின் ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி 09.08.2010 அன்று மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் கீழ்காணுமாறு ஏலதாரர்கள் கலந்து கொண்டு உச்சகேள்வி கேட்டுள்ளனர்.

1) <u>டி.பி.ரோடு வணிக வளாக தரை கடை</u>

| வ.எண். | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாதாந்திர உரிம மதிப்பு | மாதாந்திர உரிம கட்டணம் உச்ச கேள்வி தொகை | | உயர்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | | | மின் ஏலத்-தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | |
| 1) | 15 | திரு.என்.ஜோதிவேல் | 5000 | 16200 | 12700 | 16200 |
| 2) | 15 | திரு.கதிரவன் | 5000 | 15050 | 10500 | (மின் ஏலம்) |

மேற்படி டி.பி.ரோடு தரை கடை எண்.15-ற்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பைக் காட்டிலும் மின் ஏலத்தில் கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச மாதாந்திர உரிமகட்டணம் ரூ.16200/- கூடுதலாக உள்ளதால், இக்கடையை உயர்ந்தபட்ச மின் ஏலக் கேள்விதாரர்rான திரு.என்.ஜோதிவேல் என்பவருக்கு மறு பொது ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு ஒப்படை செய்யலாம்.

2) தடாகம் ரோடு

| வ.எண். | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாதந்திர உரிம மதிப்பு | மாதாந்திர உரிம கட்டணம் உச்ச கேள்வி தொகை | | உயர்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | | | மின் ஏலத்- தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | |
| 1) | 26 | திரு.ஆர்.சம்பத் | 2800 | - | 3570 | 3570 |
| 2) | 26 | திரு.ருத்திரமூர்த்தி.சி.ஏ | 2800 | 3400 | | (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி தடாகம் ரோடு கடை எண்.26-க்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பைக் காட்டிலும் ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச மாதாந்திர உரிமகட்டணம் ரூ.3570/- கூடுதலாக உள்ளதால், இக்கடையை உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிதாரர்ரான திரு. ஆர்.சம்பத என்பவருக்கு மறு பொது ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு ஒப்படை செய்யலாம்

3) பன்னீர்செல்வம் பூ மார்க்கெட் மேடை கடைகள்

| வ.எண். | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை மதிப்பு | தினசரி வாடகை உச்ச கேள்வி தொகை | | உயர்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | | | மின் ஏலத்- தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | |
| 1) | A-7 | திரு.எம்.காஜாமொய்தீன் | 250 | - | 100 | 100 |
| 2) | A-8 | திரு.கே.கண்ணன் | 250 | - | 110 | 110 |

மேற்கண்ட இனங்களுக்கு (கடை எண்.A7, A8) ஒவ்வொரு கடைக்கும் தலா ஒரு நபர் மட்டுமே ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு மின் ஏலக் கோரிக்கை ஏதும் கோரவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் கடை எண் A-7-ற்கு தினசரி வாடகை ரூ.100-ம், கடை எண். A-8-ற்கு ரூ.110/-ம் என கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

இதில் தலா ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்டு மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு ரூ.250/-ஐ காட்டிலும் மிகவும் குறைவாக கோரப்பட்டுதால், இக்கடைகளை மீண்டும் மறு பொது மின் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

4) மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துகொள்ளாத கடைகள் விபரம்:-

| வணிக வளாகம் உள்ள இடம் | கடை எண்கள் | மொத்த கடைகள் |
|---|---|---|
| அ) பன்னீர் செல்வம் பூ மார்கெட் மேடை கடைகள் | E-56, F-63, F-67, F-68, F-70, F-72, G-85, | 12 |
| கிருஷ்ணசாமி முதலியார் சாலை வடக்கு | 4, 6 | 2 |
| சுப்ரி தெரு புதிய கடை | 4-A | 1 |
| ஆ) மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்கெட் வளாகத்தில் உள்ள எடை மேடையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. | | |
| இ) தடாகம் ரோடு | 22, 23 | 2 |

மேற்படி இனங்களில் 4(அ) கடைகளுக்கு மறு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. எனவே இக்கடைகளுக்கு மீண்டும் மறு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்பள்ளி கோரலாம்.

4(ஆ) குறிப்பிட்டுள்ள மேட்டுபாளையம் ரோடு எடை மேடையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை இனத்திற்குரிய இடத்தின் எதிரே மாநகராட்சியால் தற்போது புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது, பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளதால், இவ்வினத்தினை 2010 -11 –ம் ஆண்டு முதல் வருடாந்திர ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்யலாம்.

வரிசை எண்.4 இ-ல் - குறிப்பிட்டுள்ள தடாகம் ரோடு மாநகராட்சி வணிக மைய கடை எண்கள்.22 மற்றும் 23 இடிக்கப்பட்டு பொது வழித்தடமாக மாற்றப்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தினை 2010 -11 ம் ஆண்டு முதல் ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்யலாம். இதுதொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 36 நாள் 17.08.2010-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

.

<u>அலுவலகக் குறிப்பு -</u>

(i) வரிசை எண். 1 மற்றும் 2 அனுமதிக்கலாம்.
(ii) வரிசை எண். 3) மற்றும் 4 (அ) - மறு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
(iii) வரிசை எண். 4- (ஆ) மற்றும் (இ) இனங்களை 2010-11 –ம் ஆண்டு முதல் ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்யலாம்.

ந.க.எண்.5024/2006/ அ1 (மே)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.91 நாள் 26.08.2010</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.36 நாள் 17.08.2010ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு (i) (ii) (iii) அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் : 10

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரப் பிரிவு - சத்தி ரோடு மாடு அறுவைமனை மேம்பாட்டு பணிகள் - தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் சத்திரோடு மாடு அறுவை மனையில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு ரூ. 8 லட்சம் செலவினத்தில், மத்திய அரசு தோல் ஏற்றுமதி நிறுவனத்தின் சார்பில் ரூ. 5,60,000/- வழங்க உள்ளது. மீதமுள்ள தொகை ரூ. 2,40,000/-ஐ மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யவும், இந்த அறுவைமனையில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - சத்தி ரோடு மாடு அறுவைமனை அபிவிருத்தி பணிகளை ரூ. 8 லட்சம் செலவில் மேற்கொள்ளவும், அதில் மத்திய அரசு தோல் ஏற்றுமதி நிறுவனம் வழங்க உள்ள ரூ. 5,60,000/- போக மீதி ரூ. 2,40,000/- ஐ மாநகராட்சி நிதியிலிருந்து செலவிடவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 6095/2010/எம்.இ 4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.92 நாள் 26.08.2010</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் : 11

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - மதுப்பழக்கத்தை ஒழிக்கும் சிகிச்சை மைய பராமரிப்பினை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்தல் - தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் இதுகாணும் செயல்படுத்தப்பட்டு வந்த லாலி ரோட்டில் உள்ள மதுப்பழக்கத்தை ஒழிக்கும் சிகிச்சை மையம் 119 துப்புரவுப் பணியாளர்களுக்கு இச்சிகிச்சை வழங்கி அனைவரும் மதுப்பழக்கத்திலிருந்து விடுபட்டு நலமடைந்துள்ளார்கள்.

இச்சேவையினை பொதுமக்களுக்கும் நீட்டிக்கும் வண்ணம் மாநகரில் உள்ள மதுப்பழக்கத்தை ஒழிக்கும் தனியார் மருத்துவமனைகளை அணுகியபோது கிருஷ்ணா மருத்துவமனை இப்பணியினை ஏற்க இசைந்துள்ளது. இதில் பயன்பெற வரும் நபர்களுக்கு 10 நாட்கள் சிகிச்சைக்காக ரூ. 7700/- கட்டணமாக வசூல் செய்து கிருஷ்ணா மருத்துவமனைக்கு படுக்கை வசதி, காவலர்கள், ஆம்புலன்ஸ் வசதி, குடிநீர் வசதி ஆகியவற்றுடன் வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - லாலி ரோட்டில் உள்ள மதுப்பழக்கத்தை ஒழிக்கும் சிகிச்சை மையத்தை கிருஷ்ணா மருத்துவமனை ஏற்று நடத்தவும், இதில் சிகிச்சை கட்டணமாக ஒரு நோயாளியிடம் ரூ. 7700/- வசூல் செய்து கொள்ளவும் மற்றும் பிற வசதிகள் மாநகராட்சியால் வழங்கவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 14181/2010/எம்.இ 10

மாநகர மன்ற தீர்மானம் எண்.93 நாள் 26.08.2010

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. லாலி ரோட்டில் உள்ள சிகிச்சை மையத்திற்கு தேவையான கூடுதல் அறைகள் கட்ட அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

அரசாணை எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.05.1999-இல் நகர்புற உள்ளாட்சிகளின் தரத்தை, எல்லைகளை மறு நிர்ணயம் செய்ய வணக்கத்திற்குரிய மேயர், ஆணையர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் ஆகியோர்களைக் கொண்ட குழு அமைத்து, உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு ஆணையிட்டது. அப்போதைய சூழ்நிலையில் கோயம்புத்தூர் மாநகர எல்லை விரிவாக்கம் தேவையற்றதாக இருந்ததால் அப்பொழுது மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கவில்லை.

அரசாணை எண்.131, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, நாள்.16.03.2007-ல் நகர்ப்புற உள்ளாட்சிகளின் எல்லைகளை உரிய வழிமுறைகளுக்குட்பட்டு மாற்றியமைக்கலாம் என அரசு உத்திரவிட்டதைத் தொடர்ந்து கோவை மாவட்ட ஆட்சியரால் 17.07.2007-இல் கோவை மாநகர எல்லையை விரிவாக்கம் செய்வது பற்றி சட்டமன்ற உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

அதன்படி கோவை உள்ளூர் திட்ட குழும பகுதிகளில் கோவை மாநகராட்சியை சுற்றிலும் வேகமாக வளர்ந்து வரும் குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம் நகராட்சிகளையும், இருகூர், காளப்பட்டி, சரவணம்பட்டி, துடியலூர், மதுக்கரை, வடவள்ளி, வெள்ளலூர், சின்னவேடம்பட்டி, பேரூர், வீரகேரளம், வேடப்பட்டி ஆகிய 11 நகர பஞ்சாயத்துகளையும், வெள்ளக்கிணறு, விளாங்குறிச்சி, வெள்ளானைப்பட்டி, சுண்டக்காமுத்தூர், சித்திரைச்சாவடி கிழக்கு, சித்திரைச்சாவடி மேற்கு, சோமையம்பாளையம், பன்னிமடை, ஒட்டர்பாளையம், பட்டணம், மயிலம்பட்டி, நீலம்பூர், மலுமிச்சம்பட்டி, சீராப்பாளையம், பேரூர் செட்டிபாளையம், குருடம்பாளையம் ஆகிய 16 கிராம பஞ்சாயத்துக்களையும் கோவை மாநகருடன் இணைக்க ஒப்புதல் கோரியதில், நகரமைப்புக்குழு தனது தீர்மான எண்.42 நாள்.07.12.2007 கோவை மாநகர் விரிவாக்கத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியது. அதன்பின்னர் இப்பொருள் மீது, 21.4.2008, 25.08.2008, 21.11.2009 மற்றும் 16.02.2010 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாமன்றத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட 30 உள்ளாட்சிகளோடு கூடுதலாக கீரநத்தம், தீத்திபாளையம் ஆகிய இரு உள்ளாட்சிகளையும் சேர்த்து 32 உள்ளாட்சிகளை மாநகராட்சியுடன் இணைக்க மாமன்றம் தனது தீர்மான எண்.31 நாள்.06.05.2010–ல் தீர்மானித்துள்ளது.

அதன் அடிப்படையில் மேற்படி உத்தேசம் அரசுக்கு மாவட்ட ஆட்சியர் மூலம் 12.07.2010-இல் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மாநகராட்சி மற்றும் மாநகராட்சியுடன் சேர்க்க உத்தேசித்துள்ள 32 உள்ளாட்சிகளின் மொத்த விஸ்தீரணம் 506.47 ச.கி.மீ. மக்கள் தொகை 2001-ன் கணக்கெடுப்பின்படி 14.60 இலட்சம் ஆகும்.

அதன்பின்னர், மாவட்ட ஆட்சியர், நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், அரசின் முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களால் நடத்தப்பட்ட பல்வேறு ஆய்வுகளுக்குப் பின்னர் வேகமாக வளர்ந்து வரும் நிலையில் உள்ள, மாநகராட்சியால் சுலபமாக நிர்வகிக்கக் கூடிய வகையில் உள்ள, இதர வழிமுறைகளை நிறைவு செய்யும் வகையில் உள்ள குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம் நகராட்சிகளையும் சரவணம்பட்டி, காளப்பட்டி, வெள்ளலூர், வடவள்ளி, துடியலூர், வீரகேரளம் ஆகிய நகர பஞ்சாயத்துக்களையும் மற்றும் விளாங்குறிச்சி கிராம பஞ்சாயத்தையும் கோவை மாநகருடன் கோவை மாநகராட்சி சட்டம், 1981, பிரிவு 3 (4-8)-இன்படி அரசின் ஒப்புதலுடன் கோவை மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சியுடன் இந்த உள்ளாட்சிகளை இணைக்கும் பொழுது மாநகரின் மொத்த விஸ்தீரணம் 249.69 ச.கி.மீ ஆகவும் மக்கள் தொகை 2001 ஆண்டைய மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி 12,47,828 ஆகவும், 2009-10-ம் ஆண்டைய மக்கள் தொகை 17,22,738 ஆகவும் மொத்த வருவாய் ரூ.27685.93 இலட்சம் ஆகவும் உள்ளது. இந்த உள்ளாட்சிகளை மாநகராட்சியுடன் இணைப்பதற்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகள் இசைவு தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றி வருகின்றனர்.

எனவே இந்த உள்ளாட்சிகளை கோவை மாநகருடன் இணைப்பதற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

அலுவலகக் குறிப்பு : அங்கீகரிக்கலாம். ந.க.எண். 11533/2007/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண்.94 நாள் 26.08.2010**

**1. பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம் நகராட்சிகள், சரவணம்பட்டி, காளப்பட்டி, வெள்ளலூர், வடவள்ளி, வீரகேரளம், துடியலூர் ஆகிய நகர பஞ்சாயத்துக்கள் மற்றும் விளாங்குறிச்சி கிராம பஞ்சாயத்து ஆகியவற்றை கோவை மாநகராட்சியுடன் இணைக்கவும், மாநகராட்சி எல்லையை ஒட்டி உள்ள சின்னியம்பாளையம் கிராம பஞ்சாயத்து மற்றும் புராதன பட்டீஸ்வரர் கோயில் அமைந்துள்ள பேரூர் நகர பஞ்சாயத்து ஆகியவற்றை கோவை மாநகராட்சியுடன் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்ய ஒப்புதல் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.**

**2. மாநகராட்சி எல்லையை ஒட்டியுள்ள வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி ஆகிய நகர பஞ்சாயத்துக்களையும் இணைக்க பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களால் வேண்டுகோள் எழுப்பப்பட்டது. உரிய விதிமுறைகள் மற்றும் வழிமுறைகளைப் பின்பற்றி அரசிடம் ஆலோசித்து இக்கோரிக்கை மீது தக்க முடிவு எடுக்கப்படும் என ஆணையரால் தெரிவிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 13

**பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதலாக தேவைப்படும் ஆசிரியர்கள் - பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் நியமனம் - மதிப்பூதியத் தொகையினை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்குதல் - சார்பாக.**

----------

**கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் 16 மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் 10 உயர்நிலைப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. இப்பள்ளிகளுக்கென வழங்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தும் பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக அல்லது உயர்நிலைப்பள்ளிகளாக தகுதி உயர்த்தப்பட்ட போது வழங்கப்பட்ட பணியிடங்களாகும்.**

**சில பள்ளிகளில் பள்ளி மாணவர் எண்ணிக்கைக்கேற்ப தேவையான பணியிடங்கள் இல்லை, மேலும் சில பள்ளிகளில் ஆசிரியர்கள் பணி ஓய்வு மற்றும் பணி மாறுதல் காரணமாக காலிப் பணியிடங்கள் ஏற்பட்டுள்ளன. இப்பள்ளிகளில் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் ஆசிரியர்கள் தொகுப்பூதியத்தில் (Consolidated Pay) பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக ஒப்புதல் பெறப்பட்டு நியமனம் செய்யப்படுகிறது. இவ்வாசிரியர்களது மாத ஊதியம் மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து விருப்பத்தின் பேரில் பெறப்படும் தொகையிலிருந்து வழங்கப்பட்டு வந்தது. இந்நிதியில் குறைவு ஏற்படும் போது பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் ஆசிரியர்கள் நியமனம் செய்ய இயலாத நிலை உள்ளது. அவ்வாறு ஆசிரியர் நியமனம் செய்ய இயலாத நிலை காரணமாக 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாணவர் தேர்ச்சி சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது.**

**மாநகராட்சி பள்ளிகளின் கல்வித் தரத்தை பேண பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் கூடுதல் ஆசிரியர்களை நியமனம் செய்யப்பட வேண்டி உள்ளது. மாநகராட்சி பள்ளிகளில் ஆங்கில வழி கல்வி பயில சேரும் மாணவர்களிடம் வசூலிக்கப்படும் கல்விக் கட்டணம் (Tuition Fees) (ரூ.200/250/500) மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக சந்தா ரூ.50/- தவிர எவ்வித கட்டணங்களும் வசூலிக்கப்படாததாலும், இவ்வாசிரியர்களுக்கு மாதா மாதம் பள்ளிகளிலிருந்து மதிப்பூதியம் வழங்க இயலாத நிலை உள்ளது.**

**எனவே, சம்பந்தப்பட்ட பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர் கழக தீர்மானங்களின் அடிப்படையில் நியமனம் செய்யப்படும் ஆசிரியர்களுக்கு மதிப்பூதியத்திற்கான மொத்த தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கலாம். மாநகராட்சியின் 15 மேல்நிலைப் பள்ளிகளில் 20 முதுகலைப் பட்டதாரியாசிரியர்கள், 10 மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் 16 பட்டதாரியாசிரியர்கள் சம்பந்தப்பட்ட பள்ளிகளின் பெற்றோர் ஆசிரியர் கழக தீர்மானங்களின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட வேண்டி உள்ளது.**

**இவ்வாறு நியமனம் செய்யப்படும் முதுகலை பட்டதாரியாசிரியர்களுக்கு மதிப்பூதியமாக மாதம் ரூ.3500/-, பட்டதாரியாசிரியர்களுக்கு மதிப்பூதியமாக ரூ.2500/- வழங்கி சம்பந்தப்பட்ட பள்ளிகளின் மூலம் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யலாம். இதற்கென ஆண்டொன்றுக்கு ஏற்படும் மொத்தத் செலவினத் தொகை ரூ. 13,20,000/- ஆகும்.**

**சம்பந்தப்பட்ட பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர் கழக தீர்மானங்களின் அடிப்படையில் ஆசிரியர்கள் நியமனங்கள் மேற்கொள்ளவும், அவ்வாசிரியர்களுக்கான மாதாந்திர மதிப்பூதியத்திற்கான ஓராண்டிற்கான செலவினத் தொகை ரூ.13,20,000/- மற்றும் மேலும் கூடுதலாக ஏற்படும் தொகையினையும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு அனுமதிக்காக பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.**

கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மான எண்.5, நாள்.11.06.2010-ல் பள்ளிகளில் தலைமையாசிரியர்களால் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு மதிப்பூதியம் வழங்கும் பொருட்டு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையின்போது மாணவர்களிடம் வசூல் செய்யப்பட்ட தொகையினை சம்மந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களிடம் வழங்கப்பட வேண்டும் என்றும் இனி பள்ளிகளில் அரசு விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு, எவ்வித கட்டணங்களும் மாணவர்களிடம் வசூலிக்கக் கூடாது எனும் நிபந்தனையின் பேரிலும் ஒப்புதல் வழங்கப்பட்டது.

சென்னை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தற்போது தேர்வு செய்து அனுப்பப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களை கணக்கில்கொண்டபின் கூடுதலாக தேவைப்படும் ஆசிரியர்களில் பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் மூலமாக முதுகலையாசிரியர்கள் 19-ம், பட்டதாரியாசிரியர்கள் 12-ம் நியமனம் செய்து கொள்ளவும், அவர்களுக்கு கீழ்காணுமாறு மதிப்பூதியம் வழங்குவதால் ஏற்படும் செலவினங்களையும் மற்றும் பின்னர் ஏற்படும் கூடுதல் செலவினங்களையும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| பதவி | நபர்களின் எண்ணிக்கை | நபர் ஒன்றிற்கு ஒரு மாதத்திற்கான மதிப்பூதியம் (ரூ) | கற்பிக்க வேண்டிய மாதங்களின் எண்ணிக்கை | மொத்த செலவினம் |
|---|---|---|---|---|
| முதுகலையாசிரியர் | **19** | **4500/-** | **09** | **7,69,500/-** |
| பட்டதாரியாசிரியர் | **12** | **4000/-** | **10** | **4,80,000/-** |
| | மொத்த செலவினம் | | | **12,49,500/-** |

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம் எண். 3974 /2010/ கே 7

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.95 நாள் 26.08.2010</u>

அலுவலகக்குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பொருள் :- பொன்விழா ஆண்டு நகர்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் செயல்படும் சிக்கன மற்றும் நாணயச் சங்கங்களுக்கு சமுதாய கூடம் கட்டுவது சம்பந்தமாக.

*************

கோயமுத்தூர் மாநகராட்சியில் பொன்விழா ஆண்டு நகர்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் செயல்படும் சமுதாய அமைப்பிற்கென்று கீழ்கண்ட வருடங்களில் நிதி ஒதுக்கப்பட்டு மாநகராட்சி எஸ் . ஜே. எஸ்.ஆர்.ஒய். நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | 2007–2008 | Community Structure | Rs.11,21,000/- |
| 2. | 2008-2009 | Community Structure | Rs.17,07,000/- |
| | | Infra Structure | Rs.12,64,000/- |
| | | | Rs.40,92,000/- |

மேலே குறிப்பிட்டுள்ள இத்தொகையிலிருந்து ரூ. 20,00,000/- ஐ (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) 41-வது வார்டில் உள்ள மாநகராட்சி ஓட்டுநர்கள் குடியிருப்புக்கு அருகில் கெம்பட்டி காலனி மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு வடக்கிலும், கோவைபுதூர் பைபாஸ் ரோட்டுக்கு தெற்கிலும், மேற்கு உப்பு மண்டி வீதியில் கிழக்கு நோக்கி உள்ள இடத்தில் சமுதாயக் கூடம் கட்டி அதில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு தையல் பயிற்சி, உடைகள் வடிவமைப்புப் பயிற்சி மற்றும் தையல் இயந்திரங்கள் வாங்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி இடத்தில் சமுதாயக் கூடம் அமைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க. எண் 15742 / 07/ எம்இ6

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.96 நாள் 26.08.2010</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

ஜெர்மனி நாட்டின் எஸ்லிங்கன் ஆம் நெக்கர் நகரத்தின் லார்டு மேயர் அவரது 23.01.09, 29.01.09, 21.04.10 தேதியிட்ட கடிதங்களில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோரை அவர்களது நகரைப் பார்வையிட அழைப்பு விடுத்ததுடன், மேற்படி எஸ்லிங்கன் ஆம் நெக்கர் நகரினை கோயம்புத்தூர் மாநகரத்துடன் இருநகர் ஒப்பந்தம் மேற்கொள்ளும் பொருட்டு ஆலோசனைக் கூட்டம் நடத்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் அந்நகரத்திற்கு சென்று பார்வையிட்டு அங்குள்ள முக்கிய பிரமுகர்களுடன் ஆலோசனை மேற்கொண்டால், இரு நகரங்களுக்கிடையே சுகாதாரம், கல்வி, சமுதாய சேவைகள், மற்றும் உள்ளாட்சிப் பணிகள் குறித்து விபர பரிமாற்றம் செய்துகொள்ளவும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், இளைஞர் அமைப்புகள், தொழில் கூட்டமைப்புகள் ஏற்படுத்தவும் அடித்தளம் ஏற்படுத்துவதாக அமையும். மேலும் தொழில்வளம் நிறைந்த ஜெர்மனி நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு ஆக்கப்பூர்வ பணிகள் மற்றும் எஸ்லிங்கன் ஆம் நெக்கர் நகர நிர்வாகம் குறித்தும் அறிந்து வருவதனால் கோவை மாநகரின் தொழில் வளர்ச்சிக்கு மிகுந்த பயனுள்ளதாக விளங்கும்.

வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையர் ஆகியோர் ஜெர்மனி நாட்டின் எஸ்லிங்கன் ஆம் நெக்கர் நகரைப் பார்வையிடுவதற்கு தேவையான போக்குவரத்து, தங்குமிடம் முதலிய ஏற்பாடுகளை அந்நகரமே மேற்கொள்ளும் என்பதனால் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கோ, மாநில அரசிற்கோ இதன்பொருட்டு எவ்வித செலவினமும் ஏற்படுவதில்லை.

வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையர் ஆகியோர் ஜெர்மனி நாட்டின் எஸ்லிங்கன் ஆம் நெக்கர் நகருக்கு வரும் 08.09.10 முதல் 15.09.10 வரை சென்று வருவது குறித்து மாமன்றத்தின் தகவலுக்கும் ஒப்புதலுக்கும் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் **11667/2009/MD2**

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.97 நாள் 26.08.2010</u>

1. வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையர் ஆகியோர் ஜெர்மனி நாட்டின் எஸ்லிங்கன் ஆம் நெக்கர் நகருக்கு செல்ல அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது.

2. மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் ஜெர்மனி நாட்டின் எஸ்லிங்கன் ஆம் நெக்கர் நகருக்கு இடையே இருநகர ஒப்பந்தம் மத்திய அரசின் வழிகாட்டுதல்களை பின்பற்றி ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி